# அயோத்தி குரங்குகள் உணவுக்கு ரூ.1 கோடி நன்கொடை: நடிகர் அக்ஷய் குமார் வழங்கினார்

மும்பை, அக். 30–

நடிகர் அக்ஷய்குமார் அயோத்தியில் உள்ள குரங்குகளின் உணவிற்காக ரூ.1 கோடியை நன்கொடையாக அளித்துள்ளார்.

நடிகர் அக்ஷய் குமார் பாலிவுட்டில் முன்னணி நடிகராக இருக்கிறார். தீபாவளி பண்டிகையை முன்னிட்டு உத்தரப் பிரதேசம் மாநிலம் அயோத்தியிலுள்ள குரங்குகளுக்கு உணவளிக்கும் தன்னார்வ அமைப்பிற்கு ரூ.1 கோடியை அக்ஷய் குமார் நன்கொடையாக கொடுத்துள்ளார்.

இதுகுறித்து ஆஞ்சநேயா சேவா தொண்டு நிறுவனத்தின் தலைவர் பிரியா குப்தா கூறுகையில், 'நாங்கள் குரங்களுக்கு உணவளிப்பது மட்டுமல்லாமல், அவைகளால் மனிதர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாத வகையில் சில கவனமான நடவடிக்கைகளையும் எடுக்கிறோம். நடிகர் அக்ஷய் குமார் பரந்த மனம் கொண்டவர். அவர் பெருந்தன்மையுடன் இந்த நன்கொடையை வழங்கியுள்ளார்' எனத் தெரிவித்துள்ளார்.





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று ராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள முத்துராமலிங்கத் தேவர் அரங்கத்தினை பார்வையிட்டார்.

# பசும்பொன் தேவரை போற்றும் செயல்கள், திட்டங்களை தொடர்ந்து செய்வோம்: முதல்வர் ஸ்டாலின் பேட்டி

ராமநாதபுரம், அக்.30–

**பசும்பொன் தேவரை போற்றும் செயல்கள், திட்டங்களை தொடர்ந்து செய்வோம் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று ராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில், முத்துராமலிங்கத் தேவரின் 117வது பிறந்த நாள் மற்றும் குருபூஜையை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் முத்துராமலிங்கத் தேவரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய பின்பு செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:– "அன்றைய அறம் வளர்த்த பாண்டிய மன்னர்களின் ஒருமித்த இளவல் போன்று, கம்பீரமாகக் காட்சி அளித்தார் தேவர் திருமகன்"என்று அண்ணா அவரைப் பாராட்டியிருக்கிறார்.

"வீரராகபிறந்தார்; வீரராகவாழ்ந்தார்; வீரராக மறைந்தார்; மறைவுக்குப் பிறகும் வீரராக போற்றப்படுகிறார்" என்று கலைஞர் அவரைப் பற்றி புகழ்ந்து பேசியிருக்கிறார். அத்தகைய தியாகியை போற்றும் அரசாக, தி.மு.க. அரசு செயல்பட்டு வருகிறது என்பது அனைவருக்கும் நன்றாகத் தெரியும்.

தேவர் புகழ் சேர்க்க திட்டங்கள்

மதுரை மாநகரில் மாபெரும் வெண்கலச் சிலை, பசும்பொன் மண்ணில் நினைவில்லம்,

மேல்நீலிதநல்லூர் கமுதி உசிலம்பட்டி ஆகிய இடங்களில் மூன்று அரசு கலைக் கல்லூரிகள், மதுரை ஆண்டாள்புரத்தில், "முத்துராமலிங்கத் தேவர் பாலம்" என்று பெயரிட்டோம்.

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் கல்வி அறக்கட்டளை, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினருக்கு கல்வி வேலைவாய்ப்புகளில் 20 விழுக்காடு ஒதுக்கீடு. கடந்த 2007ஆம் ஆண்டு நூற்றாண்டு விழாவை மிக எழுச்சியோடு நாம் கொண்டாடியிருக்கிறோம்.

அப்போது, திருமகனார் வாழ்ந்த இல்லம் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. விழாவை அடையாளம் காட்டக்கூடிய வகையில் வளைவு அமைக்கப்பட்டிருக்கிறது. அணையா விளக்கும் நாம் அமைத்திருக்கிறோம். நூலகக் கட்டடம் பால்குடங்கள் வைப்பதற்கு மண்டபம் முளைப்பாரி மண்டபம் என்று பசும்பொன்தேவர் திருமகனாருக்குப் புகழ் சேர்க்கும் வகையில் பல்வேறு திட்டங்களை நாம் நிறைவேற்றியிருக்கிறோம்.

இப்போது பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் 117வது பிறந்தநாளை முன்னிட்டு குருபூஜை நடத்தியிருக்கிறோம். பசும்பொன்னில் இருக்கும் அவரது நினைவிடத்தில் தமிழ்நாடு அரசு அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பான முறையில் செய்திருக்கிறது.

நேற்று முன்தினம் கூட, பசும்பொன் திருமகனாரின் பிறந்தாள் விழாவின்போது ஏற்படுகின்ற கூட்ட நெரிசலைத் தவிர்ப்பதற்காகவும், மழை – வெயிலில் இருந்து பொதுமக்களைப் பாதுகாக்கவும் 1 கோடியே 55 லட்சம் ரூபாய் செலவில் புதியதாக அமைக்கப்பட்ட தெய்வீகத் திருமகனார் உ.முத்துராமலிங்கத் தேவர் அரங்கத்தை திறந்து வைத்திருக்கிறோம். இதுபோன்று பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரைப் போற்றும் செயல்களையும் – திட்டங்களையும் தொடர்ந்து செய்வோம்.

### மீனவர்கள் கைது தொடர்கிறது

எனவே அவரது புகழ் வாழ்க! வாழ்க என்று இந்த நேரத்தில் குறிப்பிட்டு கூறிக்கொள்கிறேன்.

கேள்வி: பிஜேபி மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வந்திருக்கிறது. மீனவர்களின் கைது அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. அது பற்றி...

முதலமைச்சர் பதில்:தொடர்ந்து நாங்கள் கடிதம் எழுதிக்கொண்டு இருக்கிறோம். நான் டெல்லிக்கு செல்லும் போதெல்லாம் பிரதமரிடம் பேசியிருக்கிறேன். வெளியுறவுத் துறை அமைச்சரிடத்திலும் இதை குறிப்பிட்டு சொல்லியிருக்கிறோம். அவர்களும் அவ்வப்போது, நாங்கள் எழுதக்கூடிய கடிதத்திற்கு நடவடிக்கை எடுத்து, மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டு வருகிறார்கள். இருந்தாலும், இது தொடர்ந்து இருந்துவருகிறது. இதற்கு முடிவு காண வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டு இருக்கிறோம். அதில் எந்தவிதமான கருத்து மாறுபாடும் கிடையாது.

கேள்வி: கலைஞரால் தொடங்கப் பட்ட தேவர் கல்லூரியில் பணியிடங்கள் நிரப்புவது தொடர்பாக..

பதில்:அதற்கு தொடர்ந்து நாங்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறோம். இப்போது கூட 12 பேருக்கு பணி நியமனம் வழங்கியிருக்கிறோம். உரிய நடவடிக்கை தொடர்ந்து எடுக்கப்படும்.

கேள்வி: காவிரி வைகை குண்டாறு இணைப்புத் திட்டம் கடந்த 60 ஆண்டுகளாக கிடப்பில் இருக்கிறது. அதுபற்றி...

### காவிரி குண்டாறு திட்டத்தை நிறைவேற்றுவோம்

பதில்:2008–ம் ஆண்டு கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது தான் காவிரி குண்டாறு திட்டத்தின் முதற்கட்டப் பணி கதவணையிலிருந்து துவக்கப்பட்டது. அதன்பிறகு வந்த அண்ணா திமுக ஆட்சியில் 9 ஆண்டு காலம் அதை கிடப்பில் போட்டுவைத்திருந்தார்கள். கடைசி வருடத்தில் தான் அதை செய்யப்போகிறோம் எனும் அறிவிப்பை வெளியிட்டு தொடர்ந்தார்கள். அதையும் கோவிட் பெருந்தொற்று வந்த காரணத்தினால் கிடப்பில் போடப்பட்டது. இப்போது நாங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு அந்தப் பணிகளை துரிதப்படுத்தி தற்போது 40 சதவிகிதம் வரை நிலஎடுப்பு பணிகள் முடிந்திருக்கிறது. தொடர்ந்து அந்தப் பணிகளை விரைந்து முடிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம்.

இவ்வாறு ஸ்டாலின் கூறினார்.



பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் 117வது பிறந்தநாளையொட்டி தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னை நந்தனத்தில் அமைந்துள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள படத்திற்கு அமைச்சர்கள் எஸ். ரகுபதி, தா.மோ. அன்பரசன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, எம்.பி.க்கள் டி.ஆர்.பாலு, தமிழச்சி தங்க பாண்டியன், மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, ஏ.எம்.வி.பிரபாகரராஜா, கணபதி, துணை மேயர் மகேஷ்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ்.முருகன் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

# கொலை வழக்கில் சிறையில் உள்ள நடிகர் தர்ஷனுக்கு கர்னாடக ஐகோர்ட் இடைக்கால ஜாமீன்

பெங்களூரு, அக். 30–

**கொலை வழக்கில் கைதாகி சிறையில் உள்ள கன்னட நடிகர் தர்ஷனுக்கு கர்னாடக உயர் நீதிமன்றம் இடைக்கால ஜாமீன் வழங்கியுள்ளது. மருத்துவ காரணங்களுக்காக ஜாமீன் வழங்கப்பட்டுள்ளது.**

பிரபல கன்னட நடிகரான தர்ஷன், தனது தோழியும் நடிகையுமான பவித்ரா கவுடாவை சமூக வலைதளத்தில் சீண்டிய தனது ரசிகர் ரேணுகா சுவாமி என்பவரை கடத்தி கொலை செய்த வழக்கில் கடந்த ஜூன் மாதம் கைது செய்யப்பட்டார். இவ்வழக்கில் பவித்ரா கவுடா, தர்ஷனின் நண்பர்கள், ரசிகர் மன்ற தலைவர், பவுன்சர்கள் கைது செய்யப்பட்டனர்.

பெங்களூரு பரப்பன அக்ரஹாரா மத்திய சிறையில் தர்ஷன் அடைக்கப்பட்டார். அங்கு அவருக்கு கிடைத்த சொகுசு வசதிகள் குறித்த படங்கள் சமூக வலைதளத்தில் வெளியாகி சர்ச்சை ஆனது. அதைத் தொடர்ந்து கடந்த ஆகஸ்ட் மாதம் அவர் பெல்லாரி சிறைக்கு மாற்றப்பட்டார்.

இந்நிலையில், முதுகு தண்டு பகுதியில் ஏற்பட்ட பாதிப்புக்கு மருத்துவ சிகிச்சை பெற உள்ளதாக சொல்லி கர்னாடக மாநில ஐகோர்ட்டில் தர்ஷன் தரப்பில் ஜாமீன் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இதில் விஜயநகர மருத்துவ கழகத்தின் நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணரின் மருத்துவ அறிக்கையும் வைக்கப்பட்டது. அதன் அடிப்படையில் அவருக்கு 6 வார காலம் ஐகோர்ட் இடைக்கால ஜாமீன் வழங்கியுள்ளது.

நீதிபதி விஷ்வஜித் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். இந்த வழக்கில் இருந்து தன்னை விடுவிக்க கோரி தர்ஷன் தரப்பில் ஏற்கெனவே தாக்கல் செய்யப்பட ஜாமீன் மனு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

தர்ஷன் தனக்கு விருப்பம் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெறலாம்.சிகிச்சை பெறும் மருத்துவமனையின் விவரங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

அவருக்கு வழங்கப்படும் சிகிச்சை குறித்த விவரங்களை அறிக்கையாக ஒரு வார காலத்தில் சமர்ப்பிக்க வேண்டும். சிகிச்சையை தவிர வேறு விவகாரங்களிலும் ஈடுபடக் கூடாது. தர்ஷன் தனது பாஸ்போர்ட்டை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று நீதிமன்றம் கூறியுள்ளது.


## Dr.அகர்வால்ஸ் ஐ ஹாஸ்ப்பிடல் லிமிடெட்

Dr Agarwals Eye Hospital

CIN : L85110TN1994PLC027366

பதிவு அலுவலகம்: 3வது மாடி, புகாரி டவர்ஸ், எண்.4, மூர்ஸ் சாலை, கிரீம்ஸ் சாலை, சென்னை - 600006.

தொலைபேசி எண் : 91-44-43787777. இணையதளம் : www.dragarwal.com; மின்னஞ்சல் : investor@dragarwal.com

**30.09.2024 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆறு மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்**

(ரூ. கோடிகளில், EPS தவிர)

| விவரங்கள் | முடிவடைந்த காலாண்டு | | | முடிவடைந்த ஆறு மாதங்கள் | | முடிவடைந்த ஆண்டு |
|---|---|---|---|---|---|---|
| | 30.09.2024 | 30.06.2024 | 30.09.2023 | 30.09.2024 | 30.09.2023 | 31.03.2024 |
| | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்பட்டது |
| வியாபார நடவடிக்கைகளின் மூலம் வருமானம் | 102.19 | 100.02 | 84.09 | 202.21 | 162.64 | 319.30 |
| தனிப்பட்ட வகைகள் மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு முன் நடப்புக் காலத்திற்கான நிகர இலாபம் | 19.13 | 18.91 | 16.65 | 38.04 | 32.19 | 62.25 |
| தனிப்பட்ட வகைகள் மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு பின் நடப்புக் காலத்திற்கான வரிக்கு முன் நிகர இலாபம் | 19.13 | 18.91 | 16.65 | 38.04 | 32.19 | 62.25 |
| தனிப்பட்ட வகைகள் மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு பின் நடப்புக் காலத்திற்கான வரிக்கு பின் நிகர இலாபம் | 14.15 | 14.11 | 12.59 | 28.26 | 24.13 | 46.36 |
| நடப்புக் காலத்திற்கான விரிவான மொத்த வருமானம் [நடப்புக் காலத்திற்கான வரிக்குப் பின் லாபம் / (நஷ்டம்) மற்றும் வரிக்குப் பின் இதர விரிவான வருமானம்] | 13.94 | 14.13 | 12.20 | 28.07 | 23.65 | 46.40 |
| செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (முகமதிப்பு ரூ.10/- ஒவ்வொரு பங்கிற்கும்) | 4.70 | 4.70 | 4.70 | 4.70 | 4.70 | 4.70 |
| ரிசர்வுகள் (இதர பங்குகள்) | | | | | | 152.45 |
| பங்கு ஆதாயம் (முக மதிப்பு ரூ.10/- ஒவ்வொரு பங்குக்கு) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட இயக்கங்களுக்கு) - EPS | | | | | | |
| 1. அடிப்படை | 30.11 | 30.02 | 26.79 | 60.13 | 51.34 | 98.64 |
| 2. டைல்யூட்டட் | 30.11 | 30.02 | 26.79 | 60.13 | 51.34 | 98.64 |
| | (ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை) | (ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை) | (ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை) | (ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை) | (ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை) | (ஆண்டு விகிதம் செய்யப்பட்டது) |

**குறிப்புகள் :**

1. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள், 2015ம் வருடத்தைய செக்யூரிட்டிஸ் அண்டு எக்சேஞ்சு போர்டு ஆஃப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகளின், விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள வருடாந்திர தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் ஆகும். வருடாந்திர தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளின் முழு விவரம் ஸ்டாக் எக்ஸ்சேஞ்–ன் இணையதளம் (www.bseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளம் (www.dragarwal.com) ஆகியவற்றில் கிடைக்கும்.

Dr.அகர்வால்ஸ் ஐ ஹாஸ்ப்பிடல் லிமிடெட்டுக்காக
**Dr. அமர் அகர்வால்**
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர்
DIN 00435684

இடம் : சென்னை
தேதி : 29.10.2024



## ரெடிங்டன் லிமிடெட்

Redington

பதிவு அலுவலகம்: பிளாக் 3, பிளத்தின், ரெடிங்டன் டவர், உள்வட்ட சாலை, மேற்கு சரஸ்வதி நகர், 4வது தெரு, புழுதிவாக்கம், சென்னை 600 091

வலைதளம்: www.redingtongroup.com | மின்–அஞ்சல் : investors@redingtongroup.com

CIN: L52599TN1961PLC028758

போர்டு எண்: +91-44-42243353

**செப்டம்பர் 30, 2024–உடன் முடிந்த காலாண்டு / அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாதது ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளின் அறிக்கை** ரூ. கோடிகளில்

| வ.எண் | விவரங்கள் | ஒருங்கிணைந்தவை | | | |
|---|---|---|---|---|---|
| | | முடிந்த காலாண்டு செப்டம்பர் 30, 2024 | முடிந்த காலாண்டு செப்டம்பர் 30, 2023 | முடிந்த அரையாண்டு செப்டம்பர் 30, 2024 | முடிந்த ஆண்டு மார்ச் 31, 2024 |
| | | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்பட்டது |
| 1 | செயல்பாடுகள் மூலம் இருந்து மொத்த வருமானம் | 24,895.56 | 22,220.15 | 46,177.89 | 89,345.71 |
| 2 | வரி மற்றும் விதிவிலக்கங்களுக்கு முன் லாபம் | 381.33 | 408.33 | 673.79 | 1,574.65 |
| 3 | வரிக்கு முன் லாபம் | 381.33 | 408.33 | 673.79 | 1,574.65 |
| 4 | வரி மற்றும் விதிவிலக்கங்களுக்கு பின் லாபம் | 282.88 | 311.64 | 499.92 | 1,238.61 |
| 5 | விரிவான மொத்த வருவாய் | 296.85 | 341.88 | 483.29 | 1,133.74 |
| 6 | பங்கு மூலதன மதிப்பு | 156.35 | 156.34 | 156.35 | 156.35 |
| 7 | இருப்புகள் மற்றும் உபரி (கடனீட்டுப் பத்திரங்களின் பிரீமியம் கணக்கு தவிர மற்ற பங்கு) | 7,272.47 | 6,565.49 | 7,272.47 | 7,216.25 |
| 8 | கடனீட்டுப் பத்திரங்களின் பிரீமியம் கணக்கு | 176.12 | 175.55 | 176.12 | 176.12 |
| 9 | மொத்த நிதி சொத்துக்கள் | 7,604.94 | 6,897.38 | 7,604.94 | 7,548.72 |
| 10 | கட்டுப்படுத்தாத வட்டி | 255.60 | 329.91 | 255.60 | 313.23 |
| 11 | நிலுவையில் உள்ள கடன் | 1,577.29 | 3,155.63 | 1,577.29 | 2,806.96 |
| 12 | கடன்-பங்கு விகிதம் | 0.20 | 0.44 | 0.20 | 0.36 |
| 13 | ஒரு பங்கு வருமானம் (முக மதிப்பு தலா ரூ.2/–) (முடிந்த காலண்டுக்கான நிலையில் அல்லாத மதிப்பு) | | | | |
| | அ. அடிப்படை (ரூ.) | 3.75 | 3.88 | 6.89 | 15.59 |
| | ஆ. இளகியது (ரூ.) | 3.75 | 3.88 | 6.89 | 15.59 |
| 14 | கடன் சேவை கணக்கீடு விகிதம் (நேரங்களில்) (ஆண்டு நிர்ணயம் செய்யப்படவில்லை) | 6.15 | 4.14 | 5.89 | 5.02 |
| 15 | வட்டி சேவை கணக்கீடு விகிதம் (நேரங்களில்) (ஆண்டு நிர்ணயம் செய்யப்படவில்லை) | 5.54 | 4.86 | 5.09 | 5.09 |

**குறிப்புக்கள்**

1. நிறுவனத்தின் தனிநிலை நிதி முடிவுகளின் சாராம்சம் — ரூ. கோடிகளில்

| வ.எண் | விவரங்கள் | தனிநிலை | | | |
|---|---|---|---|---|---|
| | | முடிந்த காலாண்டு செப்டம்பர் 30, 2024 | முடிந்த காலாண்டு செப்டம்பர் 30, 2023 | முடிந்த அரையாண்டு செப்டம்பர் 30, 2024 | முடிந்த ஆண்டு மார்ச் 31, 2024 |
| | | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்பட்டது |
| 1 | செயல்பாடுகள் மூலம் இருந்து மொத்த வருமானம் | 12,384.69 | 9,928.25 | 22,686.28 | 41,227.60 |
| 2 | வரிக்கு முன் லாபம் | 681.78 | 631.91 | 891.47 | 1,303.29 |
| 3 | வரிக்கு பின் லாபம் | 618.08 | 573.03 | 773.75 | 1,081.24 |

2. மேற்கண்ட சுருக்க நிதிநிலை அறிக்கை. இந்திய பங்கு பரிவர்த்தனை வாரிய (பட்டியலிடுதலுக்கான கடமைகள் மற்றும் பிற வெளியீடுகளுக்கான தேவைகள்) நெறிமுறைகள் 2015, விதி எண் 33ன் படி, பங்குச் சந்தைகளில் சமர்ப்பிக்கப்பட்ட விரிவான காலாண்டு / அரையாண்டு / ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகள் பற்றிய அறிக்கையின் சுருக்கமாகும். காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகள் தொடர்பான முழு அறிக்கை இந்திய தேசிய பங்கு சந்தை (NSE) www.nseindia.com மற்றும் மும்பை பங்குசந்தை (BSE) www.bseindia.com ஆகியவற்றின் இணைய தளங்களிலும், நிறுவனத்தின் www.redingtongroup.com என்ற இணைய தளத்திலும் உள்ளன.

3. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள், தணிக்கை குழுவால் ஆய்வு செய்யப்பட்டு, நிறுவன இயக்குநர்கள் குழும கூட்டத்தில் அக்டோபர் 29, 2024 ஒப்புதல் வழங்கப்பட்டது.

**ரெடிங்டன் லிமிடெட் சார்பில்**
**எஸ் வி கிருஷ்ணன்**
**நிதி இயக்குநர் (முழுநேரம்)**

**இடம் : சென்னை**
**தேதி : அக்டோபர் 29, 2024**



K SUGAR C AND P IND COR

## கே.சி.பி.சுகர் அண்டு இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்

புதிவு அலுவலகம்: 'இராமகிருஷ்ணா பில்டிங்ஸ்', எண். 239, அண்ணாசாலை, சென்னை – 600006

CIN: L15421TN1995PLC033198

Tel: 044 - 28555171 - 176 / Fax: 044 - 28546617 / e-mail: secretarial@kcpsugar.com / www.kcpsugar.com

**EXTRACT OF THE STANDALONE AND CONSOLIDATED UNAUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER / HALF YEAR ENDED 30.09.2024 PURSUANT TO REGULATION 47 OF SEBI (LODR) REGULATIONS, 2015**

(ரூபாய் லட்சத்தில்) பங்கு ஒன்றுக்கான விவரங்கள் தவிர

| வ. எண். | விவரங்கள் | தனி தன் நிதிநிலை முடிவு | | | | | | கூட்டு நிதிநிலை முடிவு | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | முடிவடைந்த காலாண்டு | | | முடிவடைந்த அரையாண்டு | | முடிவடைந்த ஆண்டு | முடிவடைந்த காலாண்டு | | | முடிவடைந்த அரையாண்டு | | முடிவடைந்த ஆண்டு |
| | | 30.09.2024 | 30.06.2024 | 30.09.2023 | 30.09.2024 | 30.09.2023 | 31.03.2024 | 30.09.2024 | 30.06.2024 | 30.09.2023 | 30.09.2024 | 30.09.2023 | 31.03.2024 |
| | | (தனிக்கை செய்யப்படாத) | (தனிக்கை செய்யப்படாத) | (தனிக்கை செய்யப்படாத) | (தனிக்கை செய்யப்படாத) | (தனிக்கை செய்யப்படாத) | (தனிக்கை செய்யப்பட்ட) | (தனிக்கை செய்யப்படாத) | (தனிக்கை செய்யப்படாத) | (தனிக்கை செய்யப்படாத) | (தனிக்கை செய்யப்படாத) | (தனிக்கை செய்யப்படாத) | (தனிக்கை செய்யப்பட்ட) |
| 1. | மொத்த வருமானம் | 9157.39 | 10952.47 | 9776.85 | 20109.86 | 20343.97 | 35507.51 | 10142.05 | 13631.00 | 11642.91 | 23773.05 | 23966.90 | 41426.39 |
| 2. | வரிக்கு, விதிவிலக்கான & அசாதாரன உருப்படிகளுக்கு முன் நிகரலாபம் / (நஷ்டம்) | 2416.93 | 4559.95 | 2634.50 | 6976.88 | 5193.39 | 5839.11 | 2335.97 | 5978.15 | 3070.64 | 8314.12 | 6465.81 | 7081.82 |
| 3. | வரிக்கு முன் ஆனால் விதிவிலக்கான & அசாதாரன உருப்படிகளுக்கு பின் நிகரலாபம் / (நஷ்டம்) | 2897.48 | 4559.95 | 2634.50 | 7457.43 | 5193.39 | 6643.53 | 2816.52 | 5978.15 | 3070.64 | 8794.67 | 6465.81 | 7886.24 |
| 4. | வரி மற்றும் விதிவிலக்கான & அசாதாரன உருப்படிகளுக்கு பின் உள்ள நிகரலாபம் / (நஷ்டம்) | 2084.92 | 4326.63 | 2445.70 | 6411.55 | 4909.97 | 5626.48 | 2025.62 | 5411.55 | 2795.44 | 7437.17 | 5863.43 | 6615.95 |
| 5. | நிறுத்தப்பட்ட செயல்பாடுகளின் மூலம் லாபம் / (நஷ்டம்) | – | – | – | – | – | – | – | – | – | – | – | – |
| 6. | மற்ற விரிவான வருமானம் | – | – | – | – | – | 34.57 | 77.48 | 123.98 | 23.85 | 201.46 | 86.30 | 193.91 |
| 7. | மொத்த விரிவான வருமானம் [உள்ளடங்கியது காலத்திற்கான லாபம் / (நஷ்டம்) – வரிக்கு பின் மற்றும் காலத்திற்கான இதர விரிவான வருமானம் – விரிக்கு பின்] | 2084.92 | 4326.63 | 2445.70 | 6411.55 | 4909.97 | 5661.05 | 2103.10 | 5535.53 | 2819.29 | 7638.63 | 5949.73 | 6809.86 |
| 8. | மொத்த பங்குத் தொகை [ஒரு பங்கிற்கு முக மதிப்பு ரூ.1] | 1133.85 | 1133.85 | 1133.85 | 1133.85 | 1133.85 | 1133.85 | 1133.85 | 1133.85 | 1133.85 | 1133.85 | 1133.85 | 1133.85 |
| 9. | இருப்புக்கள் [மறுமதிப்பீட்டு இருப்புக்களைத் தவிர] – தணிக்கை செய்யப்பட்ட இருப்பு நிலை அறிக்கையின்படி | | | | | | 35854.33 | | | | | | 42734.05 |
| 10. | ஒரு பங்கின் ஈட்டுத் தொகை | | | | | | | | | | | | |
| | – அடிப்படை & நீர்த்த – தொடரும் செயல்பாடுகள் | 1.84 | 3.82 | 2.16 | 5.65 | 4.33 | 4.96 | 1.79 | 4.77 | 2.47 | 6.56 | 5.17 | 5.83 |
| | – அடிப்படை & நீர்த்த – நிறுத்தப்பட்ட செயல்பாடுகள் | – | – | – | – | – | – | – | – | – | – | – | – |
| | – அடிப்படை & நீர்த்த – தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள் | 1.84 | 3.82 | 2.16 | 5.65 | 4.33 | 4.96 | 1.79 | 4.77 | 2.47 | 6.56 | 5.17 | 5.83 |

குறிப்புகள்:

1. சர்க்கரைத் தொழில் ஒரு பருவகால தொழில் மற்றும் முக்கியமாக சுழற்சியின் தன்மை கொண்டதாக இருப்பதால், மேற்கூறிய முடிவுகளை நிறுவனத்தின் ஓட்டுமொத்த வருடாந்திர செயல்பாடுகள் மற்றும் நிறுவனத்தின் லாப குறிகாட்டியாகவோ அல்லது காலாண்டுக்கு இடையிலான ஒப்பீடாகவோ கருதமுடியாது.
2. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள், இந்திய நிறுவனச் சட்டம், 2013, பிரிவு 133–ல் பரிந்துரைக்கப்பட்ட Companies (Indian Accounting Standards) Rules, 2015–ன் படியும் அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் வழக்கம் மற்றும் கொள்கைகள் படியும் கணக்கிடப்பட்டது.
3. மேற்கண்ட தனித்த மற்றும் கூட்டு நிதிநிலை முடிவுகள் தணிக்கைக் குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டு 29.10.2024 அன்று நடந்த இயக்குநர் குழுவில் ஒப்புதல் பெறப்பட்டது.
4. தணிக்கையாளர் மூலம் மேற்கண்ட தனித்த மற்றும் கூட்டு நிதிநிலை முடிவுகள் வரையறுக்கப்பட்ட தணிக்கை செய்யப்பட்டு, அவர்களது அறிக்கை 29.10.2024 அன்று நடைபெற்ற இயக்குநர் குழுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.
5. இந்த நாளிதழ் வெளியீடு, SEBI (LODR) Regulations, 2015, விதி 33–ன் படி பங்குச் சந்தைகளுக்கு அனுப்பியுள்ள தகவலின் சுருக்கமே ஆகும். இதன் விரிவான காலாண்டு / அரையாண்டு தணிக்கை செய்யப்படாத தனித்த மற்றும் கூட்டு நிதிநிலை முடிவுகள் பங்கு சந்தைகளின் (NSE / BSE) வலைதளங்களான www.nseindia.com மற்றும் www.bseindia.com மற்றும் நிறுவனத்தின் வலைதளமான www.kcpsugar.com ஆகிய வலைதளங்களில் காணலாம்.

இயக்குநர் குழுவின் ஆணைப்படி

**கே.சி.பி.சுகர் அண்டு இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்டிற்காக**
Sd/-
**இர்ம்கார்ட் வெலகாபடி**
**நிர்வாக இயக்குநர்**

இடம்: சென்னை
தேதி: 29.10.2024